**கரும்பு சாகுபடி நிலம் தயார் செய்யும் முறைகள்**

First Published : 08 Dec 2011 03:13:11 AM IST



தருமபுரி: கரும்பு விளைவிக்கப்படும் நிலங்களில் தொடர்ந்து கரும்பு மட்டுமே சாகுபடி செய்யக் கூடாது என்று வேளாண்துறை தெரிவித்துள்ளது. ஒரு முறை கரும்பு சாகுபடி செய்தவுடன் அதை வெட்டி எடுத்த பிறகு ஒரு முறை கட்டை கரும்புக்குப் பின் அந்த நிலத்தில் மாற்றுப் பயிர் ஒன்றை சாகுபடி செய்ய வேண்டும். அதன் பின்னரே கரும்பை மீண்டும் பயிரிட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெல், வாழை, மஞ்சள், நிலக்கடலை, சணப்பை, தக்கைப்பூண்டு போன்றவற்றை கரும்பு சாகுபடி செய்யும் நிலங்களில் சுழற்சி முறையில் பயிர்களை சாகுபடி செய்யலாம் என்றும் வேளாண் துறை யோசனை தெரிவித் துள்ளது.

**நிலம் தயாரித்தல்**

ஓராண்டுப் பயிரான கரும்பின் வேர்கள் நன்றாக வளர்ந்து நீர் மற்றும் ஊட்டச் சத்துகளை மண்ணில் இருந்து பெற வேண்டுமானால் வயலில் குறைந்தது 30 செ.மீ. ஆழம் வரை மண் மிருதுவாக இருக்க வேண்டும்.

டிராக்டர் மூலம் உழவு செய்வதாக இருந்தால், முதல் உழவை சட்டிக் கலப்பை அல்லது இறக்கை கலப்பை மூலமும் 2-வது மற்றும் 3-வது உழவை கொத்துக் கலப்பை மூலம் செய்ய வேண்டும்.

மேடு, பள்ளங்கள் அதிகம் இல்லாத நிலமாக இருந்தால், 3-வது உழவுக்குப் பின் சமன் செய்யும் கருவி கொண்டு நிலத்தை சமன் செய்து பின்னர் பார் பிடிக்கும் கலப்பை கொண்டு பார்களைப் பிடிக்கலாம்.

எருதுகளைக் கொண்டு உழவு செய்வதாக இருந்தால் முதல் உழவை இறக்கைக் கலப்பை மூலம் செய்யலாம். 2-வது மற்றும் 3-வது உழவுக்கு நாட்டுக் கலப்பையை உபயோகிக்கலாம்.

மண் நன்றாக மிருதுவாகும் வரை நாட்டுக் கலப்பையை கொண்டு உழ வேண்டும். பின்னர் பார் பிடிக்கும் கலப்பை மூலம் பார் பிடிக்கலாம்.

**உரம் நிர்வாகம்**

இயற்கை உரங்களான தொழுஉரத்தை ஹெக்டேருக்கு 25 டன்கள் வரை கடைசி உழவுக்கு முன் இட வேண்டும். இதனால், மண் வளம் மேம்படுவதுடன் மண் நலமும் பாதுகாக்கப்படுகிறது.

பசுந்தாள் உரப் பயிர்களான தக்கைப்பூண்டு அல்லது சணப்பை பயிரிடப்பட்டிருந்தால் இறக்கை கலப்பையை கொண்டு மடக்கி உழுது பின்னர் 2 வாரங்களுக்குப்பின் உழவு செய்து நிலத்தை தயார் செய்ய வேண்டும். மண் பரிசோதனை முடிவுக்கேற்ப அடி உரமாக ரசாயன உரங்கள் இட வேண்டும்.

**பார் அமைத்தல்**

சாகுபடி செய்யும் ரகம், நீர் பாய்ச்சுவதற்கு வசதி மற்றும் நிலத்தின் வளம் ஆகியவற்றுக்கு ஏற்ப தகுந்த இடைவெளியில் பார்களை அமைக்க வேண்டும். நல்ல வளமான மண்ணில் நன்கு தூர்விட்டு வளரும் ரகம் பயிரிடுவதாக இருந்தால் 90 செ.மீ. பாருக்கு பார் இடைவெளி இருக்க வேண்டும்.

நல்ல வளமான மண்ணில் குறைந்த தூர்விடும் ரகமாக இருந்தால் 75 செ.மீ. இடைவெளிவிடுதல் வேண்டும். இயந்திரங்கள் மூலம் நடவு, அறுவடை செய்ய 150 செ.மீ. அகலப் பார்கள் அமைக்க வேண்டும்.

கரும்புப் பயிர் நன்கு வேர் ஊன்றி வளரவும், கரும்பு வளர்ந்தப் பின்னர் சாயாமல் இருக்கவும், பார்களுக்கு இடையே 20 செ.மீ. முதல் 30 செ.மீ. வரை ஆழத்தில் சால் அமைக்க வேண்டும்.

ஆழமான சாலில் கரும்பு நடவு செய்தால் நன்கு மண் அணைக்க ஏதுவாக இருப்பதுடன், அறுவடை செய்யும் வரை கரும்பு சாயாமல் நல்ல மகசூல் கொடுக்கும்.

கரும்பு பயிரிடப்படும் பட்டங்கள்

தமிழகத்தில் பொதுவாக டிசம்பர் முதல் மே மாதம் வரை 3 பட்டங்களில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. டிசம்பர், ஜனவரியில் முதல் பட்டமாகவும், பிப்ரவரி, மார்ச்சில் நடுப்பட்டமாகவும், ஏப்ரல், மே மாதத்தில் பின்பட்டமாகவும் பயிரிடப்படுகிறது.

சிறப்புப் பட்டமாக ஜூன், ஜூலையில் கோவை, திருச்சி, பெரம்பலூர், கரூர், சேலம், நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் கரும்பு நடவு செய்யப்படுகிறது.

இது குறித்து கூடுதல் விவரம் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

இயக்குநர், கரும்பு இனப்பெருக்கு நிறுவனம், கோவை-641007. தொலைபேசி எண்:0422-2472621.

**உளுந்துப் பயிர் அதிக மகசூல் பெறும் வழிமுறைகள்**

First Published : 08 Dec 2011 03:11:14 AM IST



உளுந்தூர்பேட்டை: உளுந்துப் பயிரில் அதிக மகசூல் பெறும் வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு திருவெண்ணெய்நல்லூர் வேளாண் உதவி இயக்குநர் தேவநாதன் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உளுந்துப் பயிரில் அதிக மகசூல் பெற அடியுரம் இடுவதுடன் கூடுதலாக இலைவழியே 2 சதவிகித டி.ஏ.பி. உரத்தினைக் கலந்து தெளிப்பது ஒரு செலவு குறைந்த எளிய, அதிக பலன் தரும் தொழில்நுட்பமாகும்.

இந்த டி.ஏ.பி. தெளிப்பை இரண்டு முறை செய்வது மிகவும் நல்லது. முதல் முறை உளுந்து விதைப்பு செய்த 25-ம் நாள் அல்லது பூக்கும் தருணமாகும். ÷

முதல் முறை தெளித்த 15 நாள் கழித்து இரண்டாம் முறை தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு தெளிப்பு செய்யத் தேவையான 4 கிலோ டி.ஏ.பி. உரத்தை தெளிப்பதற்கு முந்தைய நாள் 15 லிட்டர் நல்ல நீரில் ஊற வைக்க வேண்டும்.

மறுநாள் ஊற வைத்த நீரில் தெளிவினை மட்டும் நன்றாக வடிகட்டி 185 லிட்டர் நல்ல நீரில் கலந்து ஒரு டேங்க் தெளிக்க 2 மில்லி டீபால் ஒட்டும் திரவம் கலந்து தெளிக்க வேண்டும்.

டி.ஏ.பி. அளவை பரிந்துரைத்ததை விட அதிகமாகவோ அல்லது குறைவாகவோ தெளிக்கக் கூடாது.

மேலும் அதில் நீரின் அளவு அதிகமானால் செடிகள் மஞ்சளாகவும், குறைந்தால் செடிகள் எரிந்தது போன்றும் காணப்படும். பூச்சி மற்றும் நோய் மருந்துகளுடன் கலந்து தெளிக்கக் கூடாது. இதனால் செடிகளில் பூக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். பெரும்பாலான பூக்கள் பிஞ்சமாக மாறும்.

டி.ஏ.பி. தெளிப்பதால் காய் பிடிப்பு அதிகமாவதோடு காய்களில் உள்ள பருப்புகள் அனைத்தும் நன்றாக முற்றுவதுடன் திரட்சியாகவும், அதிக புரதச்சத்துடனும் எடை அதிகமாகவும் கிடைக்கும். இதனால் கூடுதல் மகசூல் கிடைக்கிறது.

தற்போது திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியத்தில் ஒரு ஹெக்டேருக்கு உளுந்து பயிரிட்டுள்ள விவசாயிகள் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் 25 கிலோ டி.ஏ.பியை ரூ.200-க்கு மான்யத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இதற்கு விவசாயிகள் ஒரு ஹெக்டேருக்கு உளுந்து அல்லது பாசி பயறு பயிரிட்டுள்ளதற்கான சான்றாக சிட்டா மற்றும் அடங்கலை வேளாண் விரிவாக்க மையத்தில் கொடுத்து பெற்றுக் கொள்ளலாம்.

குறைந்த செலவில் அதிக வருமானம் கிடைப்பதாலும், டி.ஏ.பி. உரம் மான்யத்தில் கிடைப்பதாலும் தற்போது திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியத்தில் உளுந்து பயிரிட்டுள்ள விவசாயிகள் அனைவரும் சரியான பருவத்தில் டி.ஏ.பி. தெளிப்புப் பணியை மேற்கொள்ள வேண்டும் என தேவநாதன் குறிப்பிட்டுள்ளார்.

**விதை ஆய்வு புத்தூட்டப் பயிற்சி**

First Published : 07 Dec 2011 11:53:21 AM IST

கீழக்கரை, டிச. 6: ராமநாதபுரம் மாவட்டம், தோட்டக்கலைத் துறை விதை விற்பனையாளர்களுக்கு விதை ஆய்வு புத்தூட்டப் பயிற்சி நடைபெற்றது.

இப் பயிற்சியில் தோட்டக்கலை துணை இயக்குநர் ராஜேந்திரன் சிறப்புரையாற்றினார். விதை ஆய்வு துணை இயக்குநர் எஸ். உமர்கத்தா பேசியபோது: சான்று பெற்ற விதைகளைப் பயன்படுத்தினால் அதிக மகசூல் கிடைக்கும். பழக் கன்றுகள், மரக்கன்றுகள், காய்கறி விதைகள் விற்பனை செய்ய கண்டிப்பாக விதை விற்பனை உரிமம் பெற வேண்டும். ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் பழக்கன்றுகள், மரக்கன்றுகள், காய்கறி விதைகள் அரசு அங்கீகாரம் பெற்ற விதை விற்பனை நிலையங்களில் பெற்று பயன் அடைய வேண்டும் என்றார்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 88.63 அடி**

First Published : 07 Dec 2011 01:44:02 PM IST

ஈரோடு, டிச. 6: பவானிசாகர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை 88.63 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு ஆயிரத்து 635 கனஅடி தண்ணீர் வந்தது. ஆற்றில் விநாடிக்கு 600 கனஅடியும், வாய்க்காலில் விநாடிக்கு 2 ஆயிரத்து 300 கன அடி தண்ணீரும் திறக்கப்பட்டுள்ளது. அணை நீர் இருப்பு 20.70 டிஎம்சி.

**மீன் குஞ்சு உற்பத்தி மையத்துக்கு 50 சதவீத மானியம்- மீன்வளத் துறை**

First Published : 07 Dec 2011 11:51:25 AM IST

சிவகங்கை, டிச. 6: தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 2011-12-ம் ஆண்டு மீன்வளத் துறை மூலம், மாவட்டத்தில் மீன் குஞ்சு உற்பத்தி மையம் அமைக்க, 50 சதவீத

மானியத்துடன் ரூ. 5 லட்சம் நிதி வழங்கும் திட்டம் உள்ளதாக, சிவகங்கை மாவட்ட மீன்வளத் துறை உதவி இயக்குநர் வை. குணசேகரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து, அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

இந்த நிதி வழங்க ரூ. 10 லட்சம் மதிப்பில் ஆண்டுக்கு சுமார் 80 முதல் 100 லட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யக் கூடிய மீன் குஞ்சு உற்பத்தி மையம் அமைக்கப்பட உள்ள இடம் தகுதியானதாகவும், வெள்ள அபாய பகுதிக்கு வெளியேயும் இருக்கவேண்டும்.

நல்ல தரமான நில நீர் அல்லது ஆற்று நீர் பாசனப் பகுதியில் மின் வசதி, சாலை வசதி கொண்டதாகவும் இருக்கவேண்டும்.

மீன் உற்பத்தி மையம் புதிதாக அமைக்கப்பட வேண்டுமெனில், 2 ஹெக்டேர் அளவுக்கு சொந்த நிலம் அல்லது 10 ஆண்டுகள் குத்தகை பெற்றதாகவும் இருக்கவேண்டும். மீன் உற்பத்தி மையம் தேவைக்கும் அதிகமாக விவசாயிகள் விண்ணப்பித்தால், தகுதிக்கு ஏற்ப பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர்.

விருப்பமுள்ளவர்கள், மீன் வள உதவி இயக்குநர், உள்நாடு மீன்வளம், எண்: 4, காளிமுத்தன் தெரு, சிவகங்கை என்ற முகவரில் நேரில் தொடர்புகொண்டு, உரிய விண்ணப்பம் பெற்று, தகுந்த ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

தினமலர்
உண்மையின் உரைகல்

**ஏமப்பேர் ஏரி உடைந்து தண்ணீரில் மூழ்கிய நெற்பயிர்கள்**

First Published : 08 Dec 2011 01:33:54 AM IST



வயலில் வேலை செய்து விட்டு முழங்கால் மேல் உள்ள தண்ணீரில் மீண்டும் வரும் பெண்கள்.

கள்ளக்குறிச்சி, டிச. 7: கள்ளக்குறிச்சி அருகே உள்ள ஏமப்பேர் பெரிய ஏரி மதகு அருகே உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் வெளியேறி புதன்கிழமை நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கின.

கள்ளக்குறிச்சியை அடுத்த ஏமப்பேரில் பெரியஏரி உள்ளது. அந்த ஏரியின் மொத்த பரப்பளவு 74 ஹெக்டேர்.

139 ஹெக்டேர் அளவுக்கு விவசாயத்துக்கு தண்ணீர் பாய்கிறது. இதனால் தென்கீரனூர், விளம்பார், மலைக்கோட்டாலம், கனங்கூர் உள்ளிட்ட பகுதி மக்ககள் பயனடைகின்றனர். ÷பின்னர் மணிமுக்தா நதியில் நீர் சென்றடைகிறது. ஏரியின் நீரின் மொத்த அளவு 283 மில்லியன் கனஅடி ஆகும்.

ஏரியின் மதகின் அருகே உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் வெளியேறியது. இதனால் 20 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கின.

தகவலறிந்து கள்ளக்குறிச்சி பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் சின்னராஜ், உதவி செயற்பொறியாளர் எம்.முரளிதரன், உதவிப் பொறியாளர் எம்.அருணகிரி, கோட்டாட்சியர் க.உமாபதி, வட்டாட்சியர் அர.லலிதா, ஏமப்பேர் கிராம நிர்வாக அலுவலர் வி.அருணாச்சலம், கிராம உதவியாளர் வெங்கடேசன் மற்றும் கிராம மக்கள் சம்பவ இடத்துக்குச் சென்று பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

மதகின் உடைந்த பகுதியில் இரு பொக்லைன் மூலம் பனைமரம், கருங்கற்கள், ஆயிரத்திற்கும் மேற்பட்ட மணல் மூட்டைகளை அடுக்கி தண்ணீர் வெளியேறாமல் 4 மணி நேரம் போராடி முதற்கட்டமாக தண்ணீரை அடைத்தனர்.

இதனால் 10 கனஅடி நீர் வெளியேறியது. தண்ணீர் வரத்து உள்ளதால் தண்ணீர் குறையவில்லை. வரும் உபரி நீர் மட்டும் வெளியேறியது. பின்னர் அணையின் கரையைப் பலப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

**மூலிகை உணவுஉற்பத்தி மற்றும்விற்பனை பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 08,2011,00:21 IST

சிதம்பரம்:டில்லி மத்திய தொழில் உயர்தொழில் நுட்பவியல் துறை நிதியுதவியுடன் மூலிகை உணவு பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை பற்றிய 4 நாள் பயிற்சி முகாம் சிதம்பரத்தில் நடந்தது.அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் பொருளாதாரத் துறை சார்பில் விருந்தினர் இல்லத்தில் நடந்த துவக்க விழாவில் பொருளாதாரத் துறை பேராசிரியர் சுந்தர வரதராஜன் வரவேற்றார். புல முதல்வர் கதிரேசன் தலைமை தாங்கினார். துணைவேந்தர் ராமநாதன் முகாமை துவக்கி வைத்துப் பேசினார். சித்த மருத்துவர் மற்றும் மூலிகை உணவு பொருள் நிபுணர் தட்சணாமூர்த்தி சிறப்புரையாற்றினார்.உதவி பேராசிரியர் சீனுவாசன் நன்றி கூறினார்.

**சொட்டுநீர் பாசனத்துக்கு மானியம் வழங்கல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 08,2011,03:03 IST

பள்ளிபாளையம் : ""உழவர் பாதுகாப்பு அட்டை பெறாதவர்கள், உடனடியாக வி.ஏ.ஓ.,வை அணுகி பெற்றுக்கொள்ளலாம். சொட்டுநீர் பாசனம் அமைப்பதற்கு மானியம் வழங்கப்படுகிறது,"

என, வருவாய்த்துறை அமைச்சர் தங்கமணி பேசினார்.பள்ளிபாளையம் யூனியன், சவுதாபுரம் பஞ்சாயத்தில், தமிழக அரசின் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி வழங்கும் விழா நடந்தது. ஆர்.டி.ஓ., கவிதா வரவேற்றார். துணை கலெக்டர் கார்த்திகேயன், மாவட்ட பஞ்சாயத்து துணைத்தலைவர் பழனிவேல், நகராட்சி சேர்மன் வெள்ளியங்கிரி, யூனியன் சேர்மன்கள் பாலசுப்ரமணியம், மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மாவட்ட கலெக்டர் குமரகுருபரன் தலைமை வகித்து பேசியதாவது:அரிசி பெற தகுதியுடைய கார்டுதாரர்களுக்கு, அரசின் விலையில்லா பொருட்கள் வழங்கப்படுகிறது. நாமக்கல் மாவட்டத்தில், நடப்பு நிதியாண்டில், 57 ஆயிரம் குடும்பங்களுக்கு விலையில்லா பொருட்கள் வழங்கப்பட உள்ளது. தற்போது, 4,200 குடும்பங்களுக்கு இப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.இப்பொருட்கள் அனைத்தும் தரமானது. விலையில்லா பொருட்களில் சிறிது பழுது ஏற்பட்டால் அதை சரி செய்வதற்காக மாவட்டத்தில், 15 பழுது பார்க்கும் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

விலை உயர்ந்த இப்பொருட்களை இல்லத்தரசிகள் முறையாக பயன்படுத்தி பராமரிக்க வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.வருவாய்த்துறை அமைச்சர் தங்கமணி பங்கேற்று, விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி வழங்கி பேசியதாவது:தமிழக முதல்வர், தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதிகளை, தற்போது திட்டங்களாக செயல்படுத்தி வருகிறார். அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில், அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரும் நோக்கில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்துகிறார்.குறிப்பாக, பள்ளி முதல் கல்லூரி வரை படிக்கும் மாணவ, மாணவியரின் எதிர்காலம் சிறப்பாக அமையும் வகையிலும், அவர்களின் கல்வித்தரம் மேம்பாட்டுக்காகவும், மாணவர்களின் நலனுக்காகவும், இந்தியாவிலேயே எங்கும் இல்லாத வகையில், லேப்-டாப் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.அரசின் திட்டங்கள் மூலம் அனைத்து தரப்பினரும் பயனடைந்து வருகின்றனர்.

ஏழைப் பெண்கள் திருமண நிதியுதவியாக, எஸ்.எஸ்.எல்.ஸி., படித்திருந்தால், 25 ஆயிரம் ரூபாய், பட்டம் மற்றும் பட்டயப்படிப்பு படித்திருந்தால், 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவியாக அரசின் சார்பில் வழங்கப்படுகிறது.உழவர் பாதுகாப்பு திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், விபத்தில் அகால மரணமடைந்தால், ஒரு லட்சம் ரூபாய், விபத்துக்கு, 10 ஆயிரம் ரூபாய், திருமண நிதி உதவியாக மகளுக்கு, 10 ஆயிரம் ரூபாய், மகனுக்கு, 8,000 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. உழவர் பாதுகாப்பு அட்டை பெறாதவர்கள் உடனடியாக வி.ஏ.ஓ.,வை அணுகி பெற்றுக்கொள்ளலாம்.சொட்டுநீர் பாசனம் அமைப்பதற்கு மானியம் வழங்கப்படுகிறது. விவசாயிகள் அதை பெற்று பயன்பெறலாம்.இவ்வாறு அவர் பேசினார்.விழாவில், சவுதாபுரம், சிக்கநாயக்கன்பாளையம், கருங்கல்பட்டி ஆகிய பஞ்சாயத்துகளில், 1,208 பேருக்கு, 62 லட்சம் ரூபாய் மதிப்பில் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பயனாளிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

**மா மரத்தில் பூக்கள் பூக்க வேளாண் துறை யோசனை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 08,2011,03:03 IST

நாமக்கல் : "மா மரத்தில் பூக்கள் பூக்க, 100 லிட்டர் தண்ணீரில், 500 கிராம் யூரியாவை கரைத்து, அதை மரத்தின் இலைகள் முழுவதும் தெளிக்க வேண்டும்' என, வேளாண் துணை இயக்குநர் நடராஜன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:மா மரங்கள் டிசம்பரில் பூக்க ஆரம்பிக்கும். ஜனவரிக்குள் பூக்காவிட்டால், 100 லிட்டர் தண்ணீரில், 500 கிராம் யூரியாவை கரைத்து, ஒட்டு திரவத்துடன் கலந்து அதை மரத்தின் இலைகள் முழுவதும் நனையும்படி தெளித்தால் மா மரங்கள் பூக்கத் துவங்கும். பிஞ்சுகள் மரத்திலிருந்து கொட்டாமல் இருக்க, நான்கரை லிட்டர் தண்ணீரில், ஒரு மி.லி., பினோபிக்ஸ் மருந்து கலந்து தெளிக்க வேண்டும்.தத்துப்பூச்சிகள் காணப்பட்டால், பாசனோன் இரண்டு மி.லி., அல்லது கார்பரில், இரண்டு கிராம் அல்லது பாஸ்போ மிடான், ஒரு மி.லி., தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். அசுவினி காணப்பட்டால், மீதைல் பெட்டான் அல்லது டையெத்தோயேட், ஒரு மி.லி., தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். பூ துளைப்பான் கொட்டை துளைப்பான் கட்டுப்படுத்த, பசலோன் இரண்டு மில்லி லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.தண்டுத் துளைப்பான் கட்டுப்படுத்த, பாதுகாக்கப்பட்ட பகுதியில் மானோகேராட்டோபாஸ் மருந்து, 10 மில்லியை பஞ்சில் நனைத்து, மூன்று செ.மீ., நீளம் வரை பட்டையை எடுத்து கட்ட வேண்டும். துளையிடப்பட்ட இடத்தில் கார்போபியூரான் சேர்த்து குருணை மருந்தை, ஐந்து கிராம் வீதம் வைத்து களிமண் கொண்டு உடனே பூச வேண்டும். இளந்தளிர் துளைப்பான், கார்பரில் இரண்டு கிராம் மருந்தை, ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.சாம்பல் நோய் கட்டுப்படுத்த, நனையும் கந்தகம் இரண்டு கிராம், ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். பழ அழுகல் தடுக்க, காய்கள் அறுவடை செய்ய மூன்று முறை, 15 நாட்கள் இடைவெளியில் மேன்கோசெப் இரண்டு கிராம் அல்லது கார்பெண்டாசில் ஒரு கிராம், ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

**பயறு வகை பயிர்களுக்கு டி.ஏ.பி., உரம் தெளிக்க மானியம் வழங்கல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 08,2011,03:03 IST

நாமக்கல் : "தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் பயறு வகைப்பயிர்களுக்கு, டி.ஏ.பி., உரம் தெளித்திட மானியம் வழங்கப்பட உள்ளது' என, நாமக்கல் வேளாண் உதவி இயக்குனர் செல்வி தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:நாமக்கல் வட்டாரத்தில், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், பயறு வகைப்பயிர்கள் பயிர் செய்துள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு, டி.ஏ.பி., உரம் இலைவழித் தெளிப்பாகப் பயன்படுத்த மானியம் வழங்கப்பட உள்ளது. பயறு

வகைப்பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையில், பாசிப்பயறு, உளுந்து மற்றும் துவரை போன்ற பயறு வகைப்பயிர்களில் இலைவழித் தெளிப்பாக இரண்டு சதவீதம் டி.ஏ.பி., உரக்கரைசல் தெளிக்க வேண்டும்.அதற்கு பயிர்கள் பூக்கும் தருவாயில் ஒரு முறையும், 15 நாட்கள் கழித்து மறு முறையும் மொத்தம் இரண்டு முறை தெளிப்பு செய்தல் வேண்டும். அதனால், பூக்கள் உதிர்வது நின்று, அதிக காய்கள் பிடிப்பதுடன், நல்ல திரட்சியான மணிகளும் கூடுதல் மகசூலும் பெற முடியும்.ஒரு ஏக்கருக்கு ஐந்து கிலோ டி.ஏ.பி., உரத்தை, 10 லிட்டர் நீரில் முதல் நாள், பிளாஸ்டிக் வாலி அல்லது மண் பானையில் ஊறவைக்கவும். மறுநாள் காலையில் தெளிந்த நீரை வடித்தெடுத்து அத்துடன், 190 லிட்டர் நல்ல நீரை சேர்த்து, காலை அல்லது மாலை வேளைகளில் செடிகள் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும்.இம்முறையில் இரண்டு சதவீதம் டி.ஏ.பி., உரக்கரைசல் தெளித்திட, நாமக்கல் வட்டாரத்தில் பயறு சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு, ஒரு ஹெக்டேருக்கு, 25 கிலோ வீதம் டி.ஏ.பி., உரம், 250 ரூபாய் மானியத்தில் வழங்கப்பட உள்ளது. எனவே, இத்திட்டத்தில் பயன்பெற விவசாயிகள், வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகம் அல்லது தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலரிடம் முன்பதிவு செய்து பயன்பெறலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

**வெங்காயம் விதை பதுக்கினால் நடவடிக்கை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 08,2011,02:49 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு: "தாராபுரம் மற்றும் குண்டடம் பகுதிகளில் சிறிய வெங்காயம் விதைகளை பதுக்கினாலோ அல்லது கூடுதல் விலைக்கு விற்றாலோ, விதை விற்பனையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என, ஈரோடு விதை ஆய்வு துணை இயக்குநர் மணிமொழி தெரிவித்துள்ளார்.அவரது அறிக்கை:தாராபுரம் மற்றும் குண்டடம் பகுதிகளில் 600 ஹெக்டேருக்கு மேல் சிறிய வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது. வரும் ஆண்டில் இன்னும் அதிக பரப்பளவில் சாகுபடியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. கோ.ஆன்.5, பிஜோ போன்ற ரகங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.ஆண்டுதோறும் சாகுபடி துவங்கும் முன் விதை விற்பனை நிலையங்களில் இருப்பில் உள்ள வெங்காய விதை மாதிரிகள், முளைப்புத் திறன் மற்றும் இனத் தூய்மைக்காக எடுக்கப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பி முடிவு பெறப்பட்டு, பின்னர் விற்பனை செய்ய அனுமதி அளிக்கப்படும். நடப்பாண்டு இதுவரை, 20 விதை மாதிரிகள், பரிசோதனை நிலையத்துக்கு அனுப்பப்பட்டது. அதில், ஆறு மாதிரிகள் மட்டுமே தேர்ச்சியடைந்துள்ளன.தாராபுரம் பகுதியில் உள்ள விதை விற்பனை நிலையங்களில் விதை இருப்பு மற்றும் விலை விபரம் நன்கு தெரியும்படி வைக்க வேண்டும். விற்பனை ரசீது வழங்கியும், அதில், விவசாயி கையொப்பம் கட்டாயம் பெற வேண்டும். சிறிய வெங்காய விதைகளை அதிக விலைக்கு விற்றால், பதுக்கினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தினகரன்

## தேயிலை உற்பத்தி 100 கோடி கிலோ

பதிவு செய்த நாள் : 12/8/2011 1:26:41 AM



புதுடெல்லி : இந்த ஆண்டில் தேயிலை உற்பத்தி 100 கோடி கிலோவுக்கு மேல் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக மத்திய வர்த்தக இணையமைச்சர் ஜோதிர் ஆதித்யா சிந்தியா தெரிவித்தார். கடந்த 6 ஆண்டுகளாக நாட்டின் தேயிலை உற்பத்தி வளர்ச்சி அதிகரித்து வருகிறது. 2010ல் 96.6 கோடி கிலோவாக இருந்த மொத்த தேயிலை உற்பத்தி, இந்த ஆண்டு 100 கோடிக்கு மேல் அதிகரிக்கும். இந்த உச்ச உற்பத்தியை தொடுவது இந்திய வரலாற்றில் இதுவே முதல் முறை. மேலும் உற்பத்தியை கருத்தில் கொண்டு தேயிலை தோட்ட மேம்பாடு, பழையவற்றை புதிப்பித்தலுக்கு நிதிதியுதவி, புதிய தோட்டம், சிறு தொழிற்சாலைகள், கொள்முதல் மையம் ஆகியவற்றிற்கு மானியம் வழங்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக மாநிலங்களவையில் சிந்தியா தெரிவித்தார்.

## முல்லைப்பெரியாறு அணையை பாதுகாக்க தமிழக அரசு அவசர ஆலோசனை

பதிவு செய்த நாள் : 12/8/2011 1:20:58 AM



சென்னை : முல்லைப் பெரியாறு அணை விவகாரம் விஸ்வரூபம் எடுத்துள்ள நிலையில், தலைமை செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதா நேற்று உயர் அதிகாரிகளுடன் அவசர ஆலோசனை நடத்தினார். அணையை பாதுகாக்க செயற்கைக்கோள் மூலம் கண்காணிக்க ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிகிறது. முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் தமிழகத்துக்கு எதிராக கேரளாவில் உள்ள கட்சிகளும், அமைப்புகளும் போராட்டம் நடத்தி வருகின்றன.

தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு செல்லும் வாகனங்கள் சேதப்படுத்தப்படுகிறது. கேரளாவில் தமிழர்களும், தமிழர்களின் வாகனங்களும் தாக்கப்படும் செய்தி கேள்விப்பட்டதை தொடர்ந்து, தமிழகத்தில் உள்ள கேரள வர்த்தக நிறுவனங்கள் மீதும் சில தமிழக அமைப்புகள் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட தொடங்கியது.

இதையடுத்து, முல்லைப் பெரியாறு அணை விவகாரம் தமிழகம் மற்றும் கேரள மாநிலத்தின் சில பகுதியில் விஸ்வரூபம் எடுத்துள்ளது. தொடர்ந்து 3வது நாளாக நேற்றும் கேரள எல்லை பகுதியில் பதற்றம் நிலவுகிறது. அங்கு பல இடங்களில் 144 தடை உத்தரவும் போடப்பட்டுள்ளது. 'அரசியல் லாபத்துக்காக பரப்பப்படும் பீதியே கேரள வன்முறைக்கு காரணம். அரசியல் தலைவர்கள் இரு மாநில உறவை பாதிக்கும்படி நடந்து கொள்ள வேண்டாம்' என்று முதல்வர் ஜெயலலிதா நேற்று முன்தினம் கேட்டுக் கொண்டார். ஆனாலும் நேற்றும், சில இடங்களில் வன்முறை சம்பவங்கள் தொடர்ந்தது.

இந்நிலையில், முல்லைப் பெரியாறு அணை பிரச்னையில் தமிழக அரசு எடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கை குறித்து முதல்வர் ஜெயலலிதா தலைமையில், நேற்று மாலை தலைமை செயலகத்தில் அவசர ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. நிதித்துறை அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் செங்கோட்டையன், மின்சாரத்துறை அமைச்சர் நத்தம் விஸ்வநாதன், பொதுப்பணித்துறை அமைச்சர் கே.வி.ராமலிங்கம், தலைமை செயலாளர் தேபேந்திரநாத் சாரங்கி, உள்துறை செயலாளர் ரமேஷ்ராம்மிஸ்ரா, நிதித்துறை செயலாளர் சண்முகம், பொதுப்பணித்துறை செயலாளர் சாய்குமார், தமிழக டிஜிபி ராமாஜனும் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்த ஆலோசனை கூட்டம் சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்றது.

கூட்டத்தில் முல்லைப் பெரியாறு அணை பிரச்னையால் தற்போது நிலவி வரும் அசாதாரண சூழ்நிலையை எப்படி சமாளிப்பது என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது. மேலும் தமிழக & கேரள எல்லை பகுதியில் கூடுதல் பாதுகாப்பு, ஆங்காங்கே சோதனைச்சாவடிகள் அமைப்பது, முல்லைப் பெரியாறு அணை அருகில் அசம்பாவித சம்பவங்கள் ஏற்படாமல் தடுக்க அதிரப்படை பாதுகாப்பு அளிப்பது,

அணை அருகே கண்காணிப்பு கோபுரங்கள் அமைத்து பாதுகாப்பு அளிப்பது மற்றும் ஜிபிஎஸ்

(சாடிலைட்) தொழில்நுட்ப உதவியுடன் அணை பகுதியை தொடர்ந்து கண்காணிப்பது உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தலைமை செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளது. அணையை பாதுகாக்க மத்திய தொழில் பாதுகாப்பு படையை அமர்த்த வேண்டும் என்று மத்திய அரசை ஜெயலலிதா கேட்டுக்கொண்டார். ஆனால், மத்திய அரசிடம் இருந்து இதற்கு எந்த பதிலும் வரவில்லை என்பதால், பாதுகாப்பு தொடர்பாக அதிரடியாக ஆலோசனை நடத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தெருவில் அடித்துக்கொள்ள வேண்டிய விஷயம் இல்லை முல்லைப்பெரியாறு விவகாரம் பேசி முடிவு செய்யப்பட வேண்டியது கவர்னர் ரோசய்யா பேட்டி

*சென்னை, டிச.8–*

*முல்லைப்பெரியாறு விவகாரம் என்பது தெருவில் அடித்துக்கொள்ள வேண்டிய விஷயம் இல்லை என்றும், இரு தரப்பினரும் பேசி முடிவு செய்யப்பட வேண்டியது என்றும் கவர்னர் ரோசய்யா கூறினார்.*

*இந்திய கடற்படை வார விழா சென்னை அருகே நடுக்கடலில் நேற்று நடைபெற்றது. இதில் தமிழக கவர்னர் ரோசய்யா தனது குடும்பத்தினருடன் கலந்து கொண்டு கடற்படை வீரர்களின் சாகசத்தை கண்டுகளித்தார். நிகழ்ச்சி முடிந்ததும் கவர்னர் ரோசய்யா நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:–*

*இந்திய கடற்படை பலம் வாய்ந்தது*

*நான் 2–வது முறையாக இந்திய கடற்படை விழாவில் கலந்து கொண்டு கப்பலில் பயணம் செய்கிறேன். கடந்த முறை மும்பையில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டு கப்பலில் பயணம் செய்தேன். எனக்கும் கப்பலின் மேல் தட்டுக்கு வந்து பார்வையிட வேண்டும் என்று ஆசைதான். இருந்தாலும் வயதாகி விட்டதால் வரமுடியவில்லை.*

*இந்திய கடற்படை மிகவும் பலம் வாய்ந்தது. தொழில் நுட்பத்திலும், பலத்திலும் மிகவும் சக்தி வாய்ந்ததாக உள்ளது. தற்போது ஐ.என்.எஸ்.ஷிவாலிக் போர்க்கப்பல் இந்திய கடற்படையில் சேர்ந்திருப்பதால், கடற்படை மேலும் வலுப்பெற்று உள்ளது. இதனால், தொழில்நுட்ப ரீதியாகவும் கடற்படை பலம் அடைந்துள்ளது.*

*முல்லைப்பெரியாறு*

*முல்லைப்பெரியாறு அணை விவகாரம் என்பது தெருவில் அடித்துக்கொள்ள வேண்டிய விஷயம் இல்லை. இரு தரப்பினரும் அமர்ந்து பேசி முடிவு காணப்பட வேண்டிய விஷயமாகும். முல்லைப்பெரியாறு அணை விவகாரத்துக்கு விரைவில் சுமுக தீர்வு காணப்படும் என்று நம்புகிறேன். இவ்வாறு கவர்னர் ரோசய்யா கூறினார்.*

## *கார்பைட் கற்கள் மூலம் பழுக்க வைக்கப்பட்ட 2 டன் பப்பாளி பழங்கள் பறிமுதல் ஊட்டியில், உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் அதிரடி நடவடிக்கை*



ஊட்டியில் பறிமுதல் செய்யப்பட்ட பப்பாளி பழங்களை உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் பினாயில் ஊற்றி அழித்த போது எடுத்த படம்.

*ஊட்டி, டிச.8–*

*ஊட்டி மார்க்கெட்டில் கார்பைட் கற்கள் மூலம் பழுக்க வைக்கப்பட்ட 2 டன் பப்பாளி பழங்களை உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் பறிமுதல் செய்து, அழித்தனர்.*

*காய்கறிகள்*

*ஊட்டி மார்க்கெட்டுக்கு தினமும் பல்வேறு இடங்களில் இருந்து காய்கறிகள், பழங்கள் லாரிகள் மற்றும் மினி லாரிகள், பிக்கப் வாகனங்கள் மூலம் கொண்டு வரப்படுகின்றன. இவைகள் தினமும் காலை ஊட்டி மார்க்கெட் காலை 8 மணி முதல் இறக்கப்படு கின்றன.*

*இந்த நிலையில் தற்போது பப்பாளி பழ சீசன் நிலவு கிறது. இதனால் சமவெளி பகுதியில் இருந்து ஊட்டிக்கு தினமும் மினி லாரிகளில் பப்பாளி பழங்கள் கொண்டு வரப்படுகின்றன. நேற்று காலை வழக்கம் போல் ஒரு லாரியில் பப்பாளி பழங்கள் கொண்டு வரப்பட்டு, ஊட்டி*

மார்க்கெட்டில் காலை 11 மணி அளவில் இறக்கப்பட் டன.

2 டன் பப்பாளி பழங்கள் பறிமுதல்

அந்த மினி லாரியில் கொண்டு வரப்பட்ட பப்பாளி பழங்கள், கார்பைட் கற்கள் மூலம் பழுக்க வைக்கப்பட்டு இருப்பதாக ஊட்டி உணவு பாதுகாப்பு துறை அதிகாரி களுக்கு தகவல் கிடைத்தது. இதன் பேரில் உணவு பாது காப்பு துறை அதிகாரி டாக்டர் ரவி மற்றும் ஆய்வாளர் சிவக் குமார் உள்பட அதிகாரி கள்அங்கு விரைந்து வந்தனர். அவர்கள் அந்த மினி லாரியில் இருந்த பழங்களை இறக்க விடாமல், அவற்றை சோதனை செய்தனர்.

சோதனையின் போது, பழங்களுக்கு நடுவே கார்பைட் கற்கள், சிறிய பாலித்தீன் பைகளில் கார்பைட் தூள்கள் இருப்பது கண்டு பிடிக்கப் பட்டது. இதை தொடர்ந்து லாரியில் கொண்டு வரப்பட்ட 2 டன் பப்பாளி பழங்களை உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

இது பற்றி ஊட்டி உணவு பாதுகாப்பு துறை அதிகாரி டாக்டர் ரவி கூறியதாவது:–

கடந்த 6 மாதங்கள் முன்பு வரை உணவு கலப்படம் மற்றும் செயற்கை முறையில் பழங்கள் பழுக்க வைப்பதை நகராட்சி அதிகாரிகள்தான் சோதனை நடத்தி, பறிமுதல் செய்து வந்தனர். ஆனால் தற் போது மத்திய அரசு உத்தரவு படி நாடு முழுவதும் உணவு பாதுகாப்பு துறை தனியாக அமைக்கப்பட்டு உள்ளது.

ரூ.1 லட்சம் வரை அபராதம்

ஊட்டியில் இந்த துறை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மார்க்கெட்டில் சோதனை நடத்தினோம். அப்போது செயற்கை முறையில், கார் பைட் கற்கள் மூலம் பப்பாளி பழங்கள் பழுக்க வைக்கப்பட்டு, லாரியில் கொண்டு வரப்பட் டது. அவற்றை பறிமுதல் செய்து உள்ளோம். 2 டன் பப்பாளி பழங்களை பறிமுதல் செய்து, அழித்து விட்டோம்.

உணவு பாதுகாப்பு துறை மூலம் ரூ.1 லட்சம் வரை அப ராதம் விதிக்க மத்திய அரசு அனுமதி வழங்கி உள் ளது. இதனால் செயற்கை முறையில் பழங்கள் பழுக்க வைப்பது கண்டு பிடிக்கப்பட்டால் அவர்கள் மீது துறை ரீதியாக நடவ டிக்கை எடுக்கப் படும். மேலும் ரூ.1 லட்சம் வரை அபராதம் விதிக்கப்படுவது டன், குற்ற வியல் நட வடிக்கை எடுக்கப் படும். இதனால் 6 மாதம் முதல் 3 ஆண்டுகள் வரை சிறை தண்டனை கிடைக்கும். எனவே உணவு கலப் படம், செயற்கை முறையில் பழங்களை பழுக்க வைப்பது போன்ற செயல்களில் வியாபாரிகள் ஈடுபட வேண்டாம். இவ் வாறு அவர் கூறினார்.



# வேளாண்மை செய்திகள்

## வெள்ளாடுகளை தாக்கும் 'போலி வெக்கை நோய்'

மாடுகளை போல ஆடுகளையும் வைரஸ், பாக்டீரியா, ஒட்டுண்ணிகள், பூஞ்ச காளாண்களால் தாக்குதல் ஏற்படுகின்றன. இதனால் ஆடுகள் உயிரிழந்து விவசாயிகளுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தி விடுகிறது. அதன்படி போலி வெக்கை நோய் ஆடுகளை பெரும்பாலும் தாக்குகிறது.



### போலி வெக்கை நோய்

பேராமிக்சோ வைரஸ் குடும்பத்தை சேர்ந்த மார்பிளி கிருமியால், இந்த போலி வெக்கை நோய் ஏற்படுகிறது. இந்தநோய் சமீபகாலமாக வெள்ளாடுகளில் தொற்று நோயாக காணப்படுகிறது. போலி வெக்கை நோய் பாதிக்கப்பட்ட வெள்ளாடுகள், நோய் பாதிப்பு இல்லாத ஆடுகளுடன் செல்லும் போது ஏற்படும் நேரடி தொடர்பால் இந்த நோய் மற்ற ஆடுகளுக்கு பரவுகிறது.

ஆடுகளில் வாயில் இருந்து வரும் எச்சில், கண்ணீர், கழிச்சல், உட்கொண்ட தீவனங்கள் மற்றும் மூலமாகவும் நோய் பரவும். மழை மற்றும் குளிர் காலங்களில் ஆடுகளுக்கு இந்த நோய் தாக்குதல் ஏற்படுகின்றன. இதனால் 50 முதல் 70 சதவீத ஆடுகள் இறந்து விடுகின்றன.

### அறிகுறிகள் என்ன?

ஆட்டு கொள்ளை நோய் வைரஸ் கிருமிகள், உணவு குழல் மற்றும் கண்களில் உள்ள தோல் மற்றும் முபூகஸ் மெம்பரேசன் என்னும் சளி சவ்வு திசுக்களில் ஒட்டுக்கொண்டு உடலுக்குள் நுழைந்து விடுகின்றன. குரல்வளையின் பின்புறம் உள்ள நிணநீர் முடிச்சுகளையும், உணவுக்குழல் மற்றும் சுவாச குழாய்களில் பாதிக்கின்றன.

இதனால் உணவுக்குழல் மற்றும் சுவாசக்குழலில் வீக்கம் ஏற்பட்டு, புண்கள் உண்டாகின்றன. நோய் தாக்குதல் ஏற்பட்ட 6 நாட்களில் அதிகபடியான ஆடுகளுக்கு அதிகப்படியான காய்ச்சல் ஏற்படும். இதனால் ஆடுகள் சுணக்கமாகவும், தூங்குவது போலவும், கண்கள் நன்கு சிவந்தும், வாய் உள்பகுதிகளில் கொப்புளங்கள் காணப்படும்.

### தடுப்பது எப்படி?

ஆடுகளுக்கு போலி வெக்கை நோய் பாதிப்பு ஏற்பட்டு இருப்பதை எலீசா பரிசோதனை மூலம் கண்டு பிடித்து விடலாம். பாதிக்கப்பட்ட ஆடுகளை தனியாக பிரித்து வைத்து, சிகிச்சை அளித்து குறைந்தது 1 மாதம் வரை கண்காணிக்க வேண்டும். நோய் பாதிப்பு உள்ள இடங்களில் கண்காட்சி, சந்தைகள் போன்றவற்றை நடத்தக்கூடாது.

நோய் பாதிப்பு உள்ள பண்ணை மற்றும் ஊர்களில் இருந்து ஆடுகள் வாங்கக்கூடாது. புதிதாக வாங்கும் ஆடுகளை குவாண்டைன் என்னும் முறையில் தனியாக பராமரித்து, தடுப்பூசி போட்ட பின்பே பண்ணையில் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஆட்டு பண்ணைகளில் சுகாதார முறைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

### நோய் பாதிப்பு

நோய் தாக்கப்பட்ட ஆடுகளை தனியாக பிரித்து வைத்து, சிகிச்சை அளிக்க வேண்டும். அப்போது வாய், உதடு, ஈறுகளில் உள்ள புண்களை பொட்டாசியம், பர்மாங்கனேட் கலந்த நீரால் கழுவி சுத்தம் செய்ய வேண்டும். பின்பு போரிங் பவுடரையும், கிளிசரினும் கலந்து புண்களில் தடவ வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் நோய் பாதிப்பை கட்டுப்படுத்தலாம்.

**–தகவல்: ஜெகத் நாராயணன், கால்நடை பராமரிப்பு துறை, சேலம்.**

## தென்னை சாகுபடியில் தொழில்நுட்பங்கள்

தென்னை சாகுபடியில் தொழில்நுட்பங்கள் குறித்து ஊத்துக்குளி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் கே.அரசப்பன் ஒரு அறிக்கை வெளியிட்டு உள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது:–

### இரு வகைகள்

தென்னை பயிரிட்டு சொட்டு நீர் பாசனம் அமைத்தால் கூலி ஆட்களின் தேவை குறைகிறது. பராமரிப்பு செலவு குறைகிறது. மேலும் சொட்டுநீர் பாசனம் அமைக்க வேளாண்மைத்துறை மானியமும் வழங்கி வருகிறது. இதனால் கிணற்று பாசனம் உள்ள பகுதிகளிலும் தென்னை சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தென்னையில் நெட்டை மற்றும் குட்டை என்று இரு வகைகள் உள்ளன. இவை இரண்டையும் கருவூட்டு சேர்த்து வீரிய ஒட்டு என்ற மூன்றாவது ரகம் உருவாக்கப்பட்டு உள்ளது. நெட்டை ரகம் 75 அடி உயரம் வரை வளரக்கூடியது. இது நட்டிய 5 ஆண்டுகளில் இருந்து காய்க்கத் தொடங்கும். 80 ஆண்டு வரை பலன் தரக்கூடியது. நெட்டை ரகத்தில் அயல் மகரந்த சேர்க்கை மூலமே காய்கள் உருவாகின்றன. எனவே தோப்பில் தேன் பெட்டி வைத்து தேனீ வளர்க்க மிகவும் உசிதமானதாகும். நெட்டை வகைகள் வறட்சி பூச்சி மற்றும் நோய் தாக்குதல்களை தாங்கி வளரும் தன்மையுடையவை. காய்களில் பருப்பு நன்றாக பருத்தும், எண்ணெய் சத்து சராசரியாக 65 சதம் உள்ளதால் தோப்புகளில் பயிரிட மிகவும் ஏற்றது.

குட்டை ரகம் 30 அடி வரை வளரக்கூடியது. நட்ட 3–ம் ஆண்டில் இருந்து பலன் தரக்கூடியது. காய்களின் நிறத்தைக் கொண்டு பச்சை, ஆரஞ்சு, சிவப்பு மற்றும் மஞ்சள் என்ற ரகங்கள் உள்ளன. குட்டை ரகங்கள் சுமார் 40 ஆண்டு வரை பலன் தரும். குட்டை ரகத்தில் தன் மகரந்த சேர்க்கையே அதிக அளவில் நடைபெறுகிறது. காய்களில் பருப்பு குறைவாக இருந்தாலும் சுவையான இளநீர் தரக்கூடியது. வீரிய ஒட்டு ரகத்தில் எந்த வகையைச்சேர்ந்த தாய் அல்லது தந்தை வழியாக பயன்படுத்தப்படுகிறதோ, அதை வைத்து நெட்டை குட்டை மற்றும் குட்டை நெட்டை மற்றும் நெட்டை நெட்டை என்று மூன்று வகையாக பிரிக்கலாம். நடுத்தர உயரம் வளரக் கூடியவை, காய்கள் நிறைய பிடிக்கக் கூடியவை.

ஜூன், ஜூலை, டிசம்பர் மாதங்கள் கன்று நடும் பருவமாகும். 3 அடி நீளம், 3 அடி அகலம், 3 அடி ஆழம் அளவுள்ள குழி அமைத்து மீத்தையல் பாரத்தியான் பூச்சி மருந்து தூளை தூவி எறும்புகளின் தாக்குதலில் இருந்து பராமரிக்கலாம். நடும் போது குழியில் மக்கிய தொழு உரம் நெம்மண், மணல் ஆகியவற்றை சமபங்கு கலந்து நிரப்ப வேண்டும். கன்று நட்டு அதை சுற்றி இறுக்கமாக மிதித்து விட வேண்டும்.

### சொட்டு நீர் பாசனம்

தென்னைக்கு சொட்டு நீர் பாசனம் அமைப்பதன் மூலம் சுமார் 60 சதவீதம் தண்ணீரை சேமிக்கலாம். கூலி ஆட்கள் தேவை குறையும். களைகளை கட்டுப்படுத்துவது எளிது. சொட்டு நீர் பாசனம் அமைக்க வேளாண்மைத்துறை 50 சதவீதம் மானியம் வழங்குகிறது. தென்னைகளின் இடைவெளியில் முதல் 5 வருடங்களுக்கு நிலக்கடலை, சூரிய காந்தி, எள், மஞ்சள், மரவள்ளி போன்றவற்றை ஊடுபயிராக சாகுபடி செய்யலாம். நன்கு வளர்ந்த தோப்புகளில் கால்நடை தீவனங்களை பயிர் செய்யலாம்.

### நோய் தடுப்பு முறை

தென்னையில் குரும்பை பருவத்திலேயே தாக்கும் ஈரியோபைட் சிலந்தி, காய்களின் தோற்றத்தையும், தரத்தையும் கெடுத்து விடுகின்றன. குரும்பை நிலையிலேயே தாக்குதல் தொடங்குவதால் மட்டைகள் சிறுத்தை காய்களின் மேற்புறம் சொரசொரப்பாகி விடுகிறது. தீவிர தாக்குதல் இருக்கும் போது மட்டைகளின் மேல்நீர் வடிதலும் காணப்படும். அசாடிராக்டின் 1 சத தாவர பூச்சி கொல்லி மருந்து ஈரியோபைட் சிலந்தியை தடுக்க வேளாண்மைத் துறை 50 சத மானிய விலையில் வழங்கி வருகிறது. தென்னை ஈரியோபைட் சிலந்தியைத் தடுக்க மரம் ஒன்றுக்கு 10 மில்லி அசாடிராக்டின் 1 சத மருந்துடன் 10 மில்லி தண்ணீர் கலந்து 45 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை வேர் மூலம் செலுத்தினால் ஈரியோபைட் சிலந்தியை தடுக்கலாம்.

தென்னையில் காண்டாமிருக வண்டு தாக்குதல் ஏற்படும் போது, கருமை நிற பெரிய வண்டு கருத்து ஓலைகளை குடைந்து திண்பதால் ஓலை விரிந்த பின் வரிசையான சிறு துளைகளை காணலாம். ஓலை திண்ணப்பட்டிருக்கும். விரிந்த மட்டையில் சேதம் விசிறி போல் காணப்படும். இதை தடுக்க மீத்தைல் பாரத்தியான் 2 சத தூளுடன் சரி பங்கு மணல் கலந்து குருத்து இடுக்குகளில் இட்டு கட்டுப்படுத்தலாம். ஆமணக்கு, புண்ணக்கு மண் பானையில் போட்டு தண்ணீர் ஊற்றி மரங்களுக்கு இடையில் வைத்து விட்டால் வண்டுகள் அதில் விழுந்து விடும்.

தென்னையில் சிவப்பு கூண் வண்டு தாக்கினால் மரத்தில் காயம் அல்லது சேதம் ஏற்பட்ட பகுதியில் துவாரத்தை உண்டாக்கிக்கொண்டு முட்டைகளை இடும். சிவப்பு தலை கொண்ட மஞ்சள் நிற புழுக்கள் மரத்தை துளைத்து உள்ளே சென்று மரத்தின் சதை பகுதியை தின்று சேதம் விளைவிக்கும். இளம் கன்றுகளில் ஒல்லு எனறப்படும் அடித்தண்டு பாகத்தில் கன்றுகள் வளர ஆரம்பிக்கும் போது சேதத்தை உண்டாக்குகிறது. வளர்ந்த மரங்களில் தண்டு பாகத்தில் ஏற்படும் காயங்களில் பெரிய வண்டுகள் முட்டை இடும். காண்டாமிருக வண்டு மூலம் ஏற்படும் காயங்களிலும் முட்டைகளை இடும். பின்னர் இதன் புழுக்கள் குருத்துப்பாகத்தை குடைந்து உள்ளே சென்று மேலும் வளரவிடாமல் மரத்தை கொன்று விடும். பதநீர் இறக்கும் போது தென்னை மரங்களில் வீரிய ஒட்டு தென்னை மரங்களிலும், இதன் சேதம அதிக அளவில் இருக்கும். ஆரம்ப நிலையிலேயே இதன் தாக்குதலை தடுக்க வேண்டும். ஆரம்ப நிலையில் செம்பழுப்பு நிற சாறு வடியும். மரங்களில் காதை வைத்து கேட்டால் வண்டின் தாக்குதல் கேட்கலாம். இதை தடுக்க தோப்பை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். கூண் வண்டு தாக்கி இறந்த மரங்களை வெட்டி எரிக்க வேண்டும். பச்சை மட்டைகளை வெட்டக்கூடாது. மரங்களில் காயம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தென்னையில் காண்டாமிருக வண்டு தாக்குதல் இல்லாமல் தடுக்க வேண்டும். கார்பரில் 5 சத தூள் 50 கிராமுடன் 100 கிராம் மணல் கலந்து குருத்து பகுதியில் இட வேண்டும். தென்னை கூண்டு வண்டுக்கென உள்ள இனக்கவர்ச்சி பொறி 5 ஏக்கருக்கு ஒன்று வைக்க வேண்டும். தென்னையில் கருந்தலைப்புழு தாக்கிய மரங்களின் இலை அரிக்கப்பட்டு சக்கைகளில் ஆன நீளமான கூண்டுகள் காணப்படும். புழுக்கள் பச்சையத்தை மட்டைகளின் அடிப்பாகத்தில் இருந்து கொண்டு சுரண்டி தின்கின்றன. இதனால் தாக்கப்பட்ட மட்டைகள் சருகு போல் காய்ந்து விடுகிறது. புழுக்களை ஒட்டுண்ணி விட்டு கட்டுப்படுத்தலாம். அல்லது மோனாகுரோட்டோபாஸ் மருந்து 10 மில்லியுடன் 10 மில்லி தண்ணீர் கலந்து வேர் மூலம் செலுத்தி கட்டுப்படுத்தலாம். மேலும் இது தொடர்பான ஆலோசனைகளுக்கு வேளாண்மைத்துறை அலுவலர்களை தொடர்பு கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## அதிக மகசூல் தரும் மரவள்ளி ரகங்கள்



மரவள்ளி கிழங்கு தென் கிழக்கு பிரேசில், தென் மத்திய அமெரிக்கா ஆகிய நாடுகளை தாயகமாக கொண்டு 2,500 ஆண்டுகளாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்தியாவில் 17–ம் நூற்றாண்டில் போர்த்துகீசிரியர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு, பல்வேறு மாநிலங்களில் அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

### மரவள்ளி சாகுபடி

குச்சி கிழங்கு, கப்ப கிழங்கு, ஏரிலை கிழங்கு, மர சீனிக்கிழங்கு என்று பல்வேறு பெயர்கள் மரவள்ளி கிழங்கிற்கு உண்டு. உலக அளவில் 450 மில்லியன் மக்கள் தங்கள் உணவில் மரவள்ளி கிழங்கை பயன்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாட்டின் கிழங்கு உற்பத்தி 41.53 லட்சம் டன் உற்பத்தியாகின்றன.

மரவள்ளி கிழங்கு வறட்சியை தாங்கி வளரும் பயிராகும். பூச்சி நோய் தாக்குதலுக்கு எதிர்ப்பு தன்மை கொண்டது. மண்வளம் குறைந்த நிலங்களில் கூட தனிப்பயிராகவும், ஊடுபயிராகவும், கலப்பு பயிராகவும் பயிரிடலாம். சிறு விவசாயிகள் பயிர் சுழற்சியில் மரவள்ளியை முக்கிய பயிராக சாகுபடி செய்யலாம். கடல்மட்டத்தில் இருந்து 2 ஆயிரம் மீட்டர் வரை உயரமுள்ள இடங்களில் வளரக்கூடியது. களர், உவர் நிலங்கள், சரளை மண், களிமண் நிலங்கள், அதிக காற்று, அதிக தண்ணீர் தேங்கும் பகுதிகள் சாகுபடிக்கு ஏற்றவை அல்ல.

### புதிய ரகங்கள்

எம்.வி.டி.–1, எச்–165, எச்–226, குங்குமரோஸ், கோ–1, கோ–2, கோ–3 கோ–4, சி.டி.சி.ஆர்.ஐ. கோ–5, எச்–97, விசாகம், ஸ்ரீ சாகியா, ஸ்ரீ ரேகா, ஸ்ரீ பிரபா, ஸ்ரீ அத்துல்யா, ஸ்ரீ அபூர்வா ஆகிய ரகங்கள் வைரஸ், பூஞ்சாண நோய் தாக்குதல் எதிர்ப்பு சக்தி கொண்டவை. இந்த ரகங்களை பாசன வசதிகளை பொறுத்து மானாவாரியிலும், இறவையிலும் ஆண்டுமுழுவதும் பயிர் செய்யலாம்.

சாதாரணமாக ஒரு மரவள்ளி குச்சியில் 15–200 கணுக்கள் இருக்கும். ஒரு குச்சி 1.5 முதல் 2 மீட்டர் நீளம் இருக்கும். குச்சிகளின் நுனி மற்றும் அடி பாகத்தை தவிர்த்து நடு பக்கத்தை மட்டும் நடவுக்கு தேர்வு செய்யலாம். குச்சியின் வெளிச்சுற்று மற்றும் தக்கை ஆகியவை தலா 50 சதவீதம் இருந்தால் கரணையின் முளைப்புத்திறன் அதிகரிக்கும்.

### சாகுபடி–விளைச்சல்

நடவு குச்சிகள் முற்றியதாகவும், ஆரோக்கியமானதாகவும், 2 முதல் 3 செ.மீ. பருமன் உள்ளதாக இருக்க வேண்டும். நடவு செய்த குச்சிகளில் இருந்து 2 மொட்டுக்களை மட்டுமே வளர்வதற்கு விடுவதால் மீதமுள்ள மொட்டுகளில் இருந்து வரும் கிளைகளை ஒடித்து விட வேண்டும். 1 ஏக்கரில் 16 செ.மீ. அளவுள்ள நாற்றங்கால் போதுமானது. வேர்கள் அதிகம் வளர சூப்பர் பாஸ்பேட் உரக்குழம்பில் கரணைகளை நனைத்து நடவு செய்ய வேண்டியது அவசியம். 75•75 செ.மீ. இடைவெளி விட்டு நட வேண்டும். ஒரு ஏக்கருக்கு 11 ஆயிரத்து 111 கரணைகள் போதுமானவை. குச்சிகளை நட்டு மண் அணைக்கும் 90 வது நாள் மேலுரம் இட்டு நீர்பாய்ச்ச வேண்டும். 5 கிலோ யூரியாவுக்கு 4 கிலோ ஜிப்சம், 1 கிலோ வேப்பம் புண்ணாக்கு ஆகியவற்றை கலந்து 12 மணி நேரம் ஊற வைத்து நடவு செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் அதிக விளைச்சல் கிடைக்கும்.

**–தகவல்: ராஜேந்திரன், நாகேஸ்வரி, செல்வராணி, மரவள்ளி–ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், சேலம்.**